**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.82/2017**

**Deposition of P.W.8**

Name : டாக்டர். திருமதி. மீனாகுமாரி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்தவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் பத்மனாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றிய போது 20.02.2010ம் தேதி இரவு 10.40 மணிக்கு திற்பரப்பு பக்தபிரியாக்கவிளை நாகப்பன் என்பவரது மகன் 29 வயது செந்தில்குமார் சுரேஷ் குமார் என்பவருடன் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை தெரிந்த நபர் ஒருவர் தக்கலை பழைய பேருந்து நிலையம் அருகே வைத்து இரவு 09.00 மணியளவில் வெட்டுக்கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவர் நல்ல சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது.

1) இடது முழங்கையின் பின்புறம் 6 x 1 x 0.5 cm அளவிலான சிதைவு

காயம் காணப்பட்டது.

மேற்படி காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன், அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயம்பட்ட நபருக்கு இடது முழங்கையில் வெட்டுக்காயம் இல்லை, சிதைவுகாயம் தான் இருந்தது. வெட்டுக்கத்தியால் வெட்டும் போது சிதைவு காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் காயம்பட்டவரை அவரது சகோதரர் சிந்துகுமார் என்பவர் அழைத்து வந்ததாக நான் கூறவில்லை, சுரேஷ்குமார் என்பவர் அழைத்து வந்ததாக கூறியுள்ளேன்.